உ

கூவத்தூர்

அருள்மிகு

ஆதிகேசவப் பெருமாள் கோவில்

தலவரலாற்றுச் சிறப்பிதழ்

பெருத்த பாருளீர்! நீங்கள் வாருமே!!

கோடிவளம் சேர்த்து குறைவற்ற செல்வம் நல்க

"கூவத்தூர்"

அன்புடன் அழைக்கிறது



அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் கோவில்

தலவரலாறு

வெளியீடு :

ஸ்ரீ ஆண்டவன் வழிபாட்டு மன்றம்

கூவத்தூர் கிராமம்

மதுராந்தகம் வட்டம், செங்கை மாவட்டம்

புண்ணியம் பெறுவோம்

எத்தனையோ தலங்கள் பூமியில் சிறந்து விளங்குகின்றன. அவைகளின் சிறப்பியல்புகள் வெவ்வேறாகத் திகழ்ந்து மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கும் நல்வினை வளர்ந்தோங்கவும் உறுதுணையாக உள்ளன. அந்தத் திவ்ய தலங்களில் ஒப்பிலாப் பெருமையுடன் திகழ்ந்து வரும் கூவத்தூர் புகழ் பூத்த தலமாகும். கடந்த பல ஆண்டுகளாக அதன் சீரும் சிறப்பும் செப்பனிடப்படாமையால் ஜெகத்தில் வாழும் மக்கள் முழுமையாய் அறியாதிருதனர். கூவத்தூர் கிராம மக்கள் இத்தலத்தினை இன்று குன்றிலிட்ட விளக்காய் மாற்ற இங்கு எழுந்தருளியிருக்கும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலை விரிவான முறையில் திருப்பணி செய்து வருகின்றார்கள். அதனைப் பற்றியும் கூவத்தூரின் பழம் பெருமைகளை எடுத்துக் காட்டும் வண்ணமாக இச்சிறுநூல் மலர்கின்றது. இத்திருக்கோயில் திருப்பணியில் கலந்துகொண்டு ஆதிகேசவர் அருளினால் புண்ணியம் பெற, இருகரம் குவித்து அனைவரையும் அன்புடன் திருப்பணிக் குழு அழைக்கின்றது.

திருத்தலப் பெருமை

பாலாறு தன் ஊற்றுப் பெருக்கால் உலகு **ஊட்டும்** தொண்டை நன்னாட்டில், திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற திருவிடவெந்தை என்னும் திவ்யதேசத்திற்குத் தென் கிழக்கிலும் பூதத்தாழ்வார் அவதாரம் செய்ததும் **மாமல்லபுரம்** என வழங்கும் திவ்ய திருப்பதிக்குத் தெற்கிலும் பொலிந்து விளங்குவது கூவத்தூர் என்னும் திருப்பதி.

"பொன்னலங்கழினி தண்கயம் சூழும்" இந்தத்திருப்பதி சகல தேவர்களும் பூசித்த தெய்வத்தலம்; இங்குக் கங்கை காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள் கிணறு வடிவாக இருந்து பூசித்தன. அதனால் அந்தக் கிணறுகளின் பேரினால் (கூவம்–கிணறு) இவ்வூர் கூவத்தூர் ஆகியிருக்கிறது.



ஸ்ரீ ஆதிகேசவர்

அது மட்டுமா! நாரதரும் புதனும் சேர்ந்து இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றிருக்கின்றார்கள். மேலும் அனுமன் சஞ்சீவி பர்வதத்தை எடுத்துக்கொண்டு இலங்கை செல்லும் போது ஒளி உமிழும் இக் கிணற்றில் நீரருந்தி இளைப்பாறிச் சென்றிருக்கின்றான். தேவர்கள்

மட்டுமல்ல; நாகர்கள் தலைவனான நாகதத்தன் இங்கு வழிபட்டு இழந்த மணிமுடியைப் பெற்றிருக்கிறான்.

இவ்வளவு சிறப்புக்களுக்கும் உரிய ஆதிகேசவப் பெருமாளின் பெருமையை உணர்ந்து கொள்வது பெரும்பேற்றினை நல்கும் அல்லவா?

புன்னகை தவழும் மதி முகத்தால் வாவென்று அழைத்து வரமருளும் வள்ளல் அந்த **ஆதிகேசவர்.**

கேசவன் என்றால் மனக் கிலேசங்களை (குழப்பங்களை) போக்கு பவன் என்று பொருள். கலி முற்றிய இக்காலத்தில் நமக்குத்தான் பொழுது போனால், பொழுது விடிந்தால் ஆயிரம் குழப்பம் வந்து வாட்டுகிறதே; அதனால் இந்த ஆதிகேசவப்பெருமானை ஒருமுறையா வது தரிசித்து நமது மனக்கவலைகளை மாற்றிக் கொள்ளலாம்!

இந்தக் கூவத்தூர் சென்னை–பாண்டிச்சேரி கிழக்குக் கடலோரச் சாலையில் சென்னையிலிருந்து 80 K. M. தொலைவில் இருக்கிறது. சென்னையிலிருந்துபஸ்ஸில் சுலபமாகப் போய்வரலாம் (தடம் எண் (188 கடலூர் To சென்னை) மஹாபலிபுரம் மதுராந்தகத்திலிருந்தும் பஸ் வசதி இருக்கின்றது; புதிய அணு மின் திட்டம் இருக்கும் கல்பாக்கத்திலிருந்து ஐந்தே கிலோ மீட்டர்தான்.

கங்கை, காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள் இங்கு வழி பட்டன என்கிறார்கள்.

மனிதர்கள் தான் தினம் தினம் எத்தனை பாவம் செய்கின்றனர். அதனை நீங்க புண்ணிய தீர்த்தங்களில் நீராடி அதனைத் தொலைக்கின் றனர். இப்படி நாள்தோறும் அநேகர் விட்ட பாவங்களின் சுமை யால் சப்த நதிகள் யாவும் தங்கள் வளங்குன்றி ஒளியிழந்துபோயின. அந்த நதிகளெல்லாம் வேதவியாசரைச் சந்தித்து "வேதங்களைப் பூவு லகிற்குத் தந்தவரே, முனிகளில் பெருமைக்குரியவரே மனிதர் செய்த பாவங்கள் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழி பட்டால் பாவம் அதில் கரைந்து போகும் என்று வேதங்கள் கூறு கின்றன. இதனால் மனிதர்கள் நாள்தோறும் வந்து மூழ்கிப் புனித மடைகின்றனர். ஆனால் நாங்களோ அவர்கள் விலக்கிவிட்ட பாவத்தைச் சுமந்து ஒளி இழந்து வளங்குன்றிப் போனோம் ஆதலால் நீங்கள் எங்களைக் காத்துப் புதுமைப்பெற செய்ய வேண்டும்" என்று முறையிட்டனர்.

அதற்கு அவர் "தாயினும் தயவுடைய புண்ணிய நதிகளே! எல்லா உயிர்க்கும் இன்பமளிக்க வல்ல திருமால், பூர்வாரண்

யமெனப் போற்றப்படும் ஆதிவனத்தில் வசிக்கும் வேதகோஷர் என்னும் முனிவருடைய ஆசிரமத்தில் **ஆதிமூலர்** என்ற பெயரில் எழுந்தருளி இருக்கின்ருர். அவரை வணங்கினுல் உங்கள் மனக் கவலைகள் மாறும்'' என்று கூறினுர்.

நாகதத்தனின் மணி முடியை மீட்டுத் தந்த பக்தர் மனப் பாங்கறிவாள் (மரகதவல்லித் தாயார்)

அன்றே இந்தப் புண்ணிய நதிகள் முனிவரின் ஆசிரமத்தில் ருஒ தீர்த்தக் கிணருக மாறி ஆதிமூலப் பிரானுக்குத் திருமஞ்சன நீராகி விளங்கி வரலாயின, இப்படி ஒரு மண்டல காலம் வரையில் அங்கு அவை அப்படி தவமிருந்தன. நாற்பதாம் நாளில் பங்குனி உத்திரம் வர அந்தப் புனிதநாளில் இந்த நதிகளுக்கு முன்னே ஆதிமூலனுர் தோன்றி, ''நீங்களே பாவத்தை அழிக்கும் தகைமை பெறுவீர். நீங்கள் பூரண பொலிவும் வளமும் எந்நாளும் பெறுவீர் என்று வாழ்த்தினுர். நதிகளும் மகிழ்ந்து, ''இறைவனே உன்னுல் எங்கள் மனக்கவலையாகிய கிலேசம் ஒழிந்தது. அதனுல் இன்று முதல் நீங்கள் **ஆதிகேசவர்** என்றுபெயர் பெறவேண்டும். இங்கு வழிபடும் எல்லோருடைய மனக்கவலைகளையும் நீக்கவேண்டும். நாங்கள் வடிவெடுத்து வந்த இந்தக் கிணற்றின் பெயரினுலேயே இந்த ஊர் வழங்கப்பட வேண்டும்,'' என்று கேட்டுக் கொண்டன. எம்பெருமானும், ''அப்படியே ஆகட்டுமென'' ஆசி நல்கினுர். அது முதல் இந்த ஊர் கூவத்தூர் என்று அழைக்கப்படலாயிற்று. இதுதான் கூவத்தூர் பிறந்த வரலாருகும்.

இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கினலேயே சப்த தீர்த்தங்களில் மூழ்கிய புண்ணியம் சேரும்; மனக்கவலைதீரும். வெற்றிகள் கூடும் அது மட்டுமல்ல இங்கு வழிபட்டு நாரத முனிவன் நல்வாழ்வு பெற்ற கதையையும் சான்றேர் கூறுகிறர்கள்.

நாரதர் பெற்ற சாபவிமோசனம்

வீணைக்கு நாரதன் என்று போற்றப்படும் நாரதருக்கு எப்போதுமே தன் இசைப்புலமை மீது அபார நம்பிக்கை. அதனல் தன்னை விஞ்சுபவர் இல்லை என்ற மனேபாவம். ஒருமுறை இவர் பிரம்மனிருக்கும் சத்யலோகம் சென்றர். அங்கு அவருடைய அன்னை சரஸ்வதி தேவியிடம் இசையினைப்பற்றி தர்க்கம் நடத்தினர்; பேச்சு

விரிநீள் சிறகன் வியன் மார்பன் காற்றினும் கடிய வேகத்தான்
கருடபகவான்

வளர்ந்து கொண்டே வந்தது. ஏற்கனவே மமதை பிடித்த இவர் சரஸ்வதியை மட்டம் தட்டிப்பேச ஆரம்பித்துவிட்டார். சரஸ்வதிக்கு இதனல் மகா கோபம், "என்னைத் தாயென்றும் கலையின் அதிபதி என்றும் யோசியாமல் ஆணவத்தால் அறிவிழந்து அவமதித்தாய் நீ கற்ற வித்தைகள் யாவும் மறந்து போகட்டும் உனது வீணை மறைந்து போகட்டும்" என்று சாபமிட்டாள்.

இதனல், நாரதர் மூவுலகிலும் அலைந்து திரிந்து வருந்தினர். இப்படியிருக்க ஒருநாள் நவக்கிரகங்களில் ஒருவனும் வித்தைக்கு அதிபதியுமான புததேவன் நாரதனைக் கண்டான். நாரதரே உங்களுடைய

பழைய தேஜஸ் எங்கே போயிற்று ஏன் இப்படி வாடி மெலிந்து போனீர்கள்,'' என்று விசாரிக்க நாரதரும் நடந்ததை ஒன்றுவிடாமல் கூறினர். அதற்குப் புதன் "இனிமேல் நீங்கள் வருந்த வேண்டாம்'', தென்பாரத தேசத்தில் பூர்வ வனம் என்னுமிடத்தில் வேதகோஷர் ஆசிரமம் இருக்கிறது. அவர் அரும் தபசி. அவரைச் சரணடைந்தால் உங்கள் மனக் கவலையை மாற்றுவார் என்றுன். அது கேட்ட நாரதர் இந்தப் பகுதிக்கு இந்திரனேடு வந்து அந்த முனிவரை பணிந்து வழிபட அவர் ஆதிமூலனுராகிய ஆதிகேசவரை காட்டுகின்ருர். நாரதர் இந்திரன் கொடுத்த சக்ராகிருதி என்ற விமானத்தில் ஆதிகேசவரையும் மயூர மண மண்டபத்தில் மரகதவல்லித் தாயாரையும் வைத்து வழிபட முன் சொன்ன அதே பங்குனி உத்திர நாளில் நாரதருக்கு இழந்த புலமையையும் அற்புத வீணையையும் ஆதிகேசவர் அருளினர்.

இன்பத்தால் மனம் மகிழ்ந்த நாரத முனிவர் "நீங்களே கேசவர், எனக்கு இப்படி ஞானமும் கல்வியையும் வழங்கியது போலவே இந்தத் திருப்பதியில் வழிபடுவதால் எல்லோருக்கும் கல்வியில்சிறந்த தேர்ச்சி அதிகரிக்க அருள் புரிய வேண்டுமென்ருர்.

எனக்குப் புதனுல் இத்தகைய பாக்யம் கிடைத்ததினுல் புதன் கிழமைகளில் தங்களே வழிபடுவோர் கல்வி, கேள்விகளிலும் தொழிலிலும் மேன்மை பெறவேண்டும். புதன் தசையினுல் கஷ்டப்பட்டு வந்தால் அவர்களே நீங்கள் அருள்பாலிக்க வேண்டும். மொத்தத்தில் இது புதனுக்குரிய க்ஷேத்திரமாக இருக்க வேண்டுமென்று'', கேட்டுக் கொண்டார்.

அது முதல் புதன்கிழமை இங்கு வழிபாடு செய்வது மிகச்சிறந்தது என்றும் புதன் தசை, புக்தியினுல் வருந்துவோர் இங்கு வழிபட்டால் வளமை வளரும்; அருள் கூடும் என்றும் அருள் பாலித்தார்.

அது மட்டுமல்ல

பலத்திலும் வளத்திலும் புத்திசாதுர்யத்திலும் சிறந்தவனுன அனுமனும் கூட இங்கு வந்திருக்கிருன் என்ருல் பாருங்களேன் இந்தத் தலத்து மகிமையை என்னென்பது.

அஞ்சனை செல்வனும் ஆதிகேசவரும்

சீதையை மீட்பதற்காக இராமனுக்கும் இராவணனுக்கும் கோரமான யுத்தம் நடக்கிறது. இராவணின் மகனுன இந்திரஜித் இராமனுடைய வானர சேனை மீது நாக பாசத்தை விடுகிருன். அதன்

விஷ வீர்யத்தால் இராம லக்ஷ்மணனேடு எல்லோரும் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்து விடுகின்றனர். இரண்டேபேர் மட்டும் சுய நினைவுடன் இருக்கின்றனர். மாலைப் பொழுது தேய்ந்து கொண்டே வருகிறது. மயக்கமுற்ற இருவரில் ஒருவனுன ஜாம்பவான் மிகவும் வயதானவன். இளையவன் வலியவன் அனுமன் மட்டுமே. மயங்கி விழுந்துகிடக்கும் இவர்களை இரவுக்குள் எழுப்ப வேண்டுமாஞல் இமயமலைச் சாரலிலுள்ள சஞ்சீவி மூலிகை வேண்டும். அதனுல்அனுமான் ஜாம்பவான் சொன்ன அடையாளங்களை வைத்துக் கொண்டு இமய மலைச் சாரலை அடைகிருன்.

சொல்லின் செல்வன் சமய சஞ்சீவியாய் நமக்கு உதவ எப்போதும் காத்து நிற்கும் அனுமன்



கவிந்துள்ள இருளில் எது மூலிகை எது சாதாரணமான செடி என்று தெரியவில்லை. பார்த்தான் அனுமன் அங்குச் சொல்லி அனுப்பிய அடையாளங்களுள்ள மலையையே பெயர்த்துக்கொண்டு விண்ணில் பறக்கிருன். கொஞ்ச நஞ்சமான தூரமானதா இலங்கைக்கும் இமய மலைக்கும். அவனுக்கு அயர்ச்சி மேலிடுகிறது கொஞ்சம் தண்ணீர் குடித்தால் நலமாக இருக்கும் என்று எண்ணுகிருன். கீழே இருட்டில் நீர் நிலை ஏதும் தெரியவில்லை. சற்று நேரத்திற்குப்பின் ஒளியுமிழும் ஓர் கிணறு தெரிகிறது. அங்கு இறங்கித் தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுகிருன். அங்கு கிணறு வடிவிலிருக்கும் சப்த நதிகள் அவனை ஆசீர்வதிக்கின்றன. இராமாயண காலத்திற்குப்பின் தான் இங்கேயே தங்கி இராம சங்கீர்த்தனம் செய்வதாகக் கூறிச் செல்கிருன். மீண்டும் மலையைத்தூக்கிக்கொண்டு வானில் எழும்போது சஞ்சீவி பர்வதத்தின் ஓர்துண்டு தெரித்து விழுகிறது. அதுவே பின்னுளில்

அச்சிறுப்பாக்கம் மலையாகிவிட்டது. சித்தர்களும் வித்தர்களும் சாவா மூவா மருந்தான சஞ்சீவி மூலிகையை நாடி அம்மலையில் இன்றும் வாழ்வதாகச் செவி வழி செய்திகள் கூறும்.



காற்றினும் கடிய வேகத்தில் அனுமன் மட்டுமா பறக்கிறான் அவனது கோயில் திருப்பணியும் அப்படித்தான் முடிந்து சம்ரோட்சணத்திற்குத் தயாராக இருக்கிறது.

இப்போது கூட அனுமன் கோவில் தான் முதலில் எழும்பியது இவரை வழிபடுவதனால் இளமையும் வலிமையும் பெறுவார்கள். இராமன் இலக்குவன் துன்பத்தை மாற்றவல்ல வலிமைபடைத்தவன் நாம் படும் துன்பத்தையா சகித்துக் கொள்வான். நாமும் இவரை வழிபட்டுத் துன்பத்திலிருந்து விடுதலை பெறலாம்.

தேவர்களும் முனிவர்களும் காவிய நாயகர்களும் வழிபட்டுப் பேறுபெற்ற செய்திகளைக் கேள்விப்பட்டோம்.

இங்கு எழுந்தருளியிருக்கும் தாயார் அருளினால் நாகர் தலைவனான நாகதத்தன் இழந்த மணி முடியைப் பெற்ற வரலாற்றையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு சமயம் நாகலோகத்தலைவனான நாகதத்தன் என்பவன் அசுரர்களால் மிகவும் துன்பமடைந்தான். அசுரர்கள் நாகலோகத்தில்

உள்ள அளவற்ற செல்வங்களுக்காக நாகலோகத்தாரைக் கொள்ளை யிட்டுத் தொல்லை படுத்தி வந்தனர். இவர்கள் அடிக்கடிக் கொள்ளை யிட்டதால் நாகலோகமே பயந்து நடுங்கியது. அவ்வரசன் ஆதிசேட னிடம் முறையிட அவனை ஆதிசேஷன் ஆதிமூலப் பிராட்டியாரிடம் அனுப்புகிருன். அவனும் அனேக மரகதங்களைக் கொண்டு சென்று பிராட்டிக்குச் சூட்டி வழிபட்டு நிற்க, பிராட்டியும் ஆதிகேசவரிடம் சொல்லி நாகலோகத்தைக் காத்து அசுரர்கள் கொள்ளையடித்த செல்வங்களை மீட்டுத்தர உதவுகிருள். அன்று முதல் மரகதத்தில்



பரமன் ஜீவனுக்கு நல் ஒளி காட்டுவதைச் சித் தரிக்கும் தீபஸ்தம்பம் என்னும் கருடதம்பம்

மகிழ்வதனுல் அன்னைக்கு மரகதவல்லி என்ற பெயர் உண்டா யிற்று. அன்னையும் “பக்தர் மனப் பாங்கறிவாள்” என்று பைந் தமிழில் பெயர் பெற்றுள். நாம் இவள் முன்னுடி போய் நின்றுலே போதும்; நமக்கு என்ன வேண்டுமோ அதைக் கொடுத்து விடுவாள் அப்படி ஒரு தன்மை இப்பெருமாட்டிக்கு. அது முதல் இங்கு வழி பட்டால் நாகதோஷம் எதுவாயினும் நீங்கும் என்பது பிரசித்தம்.

நீங்கள் தேவர் நாகர் முனிவர்களைப்பற்றி எல்லாம்சொன்னீர்கள் மனிதர்கள் யாருமே இங்கு வழிபடவில்லையா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. இங்கு காலம் காலமாக மனிதர் எவ்வளவோபேர் வழிபட்டு வளம் பெற்றிருக்கின்றனர்; அந்த செய்திகளை ஆயிரம் நாக்குப் படைத்த ஆதிசேடனுலும் சொல்ல முடியாதெனும் போது நம்மால்

மட்டும் எப்படிச் சொல்ல முடியும் நீங்கள் ஒருமுறை சென்று சேவியுங்கள் அதன் பயனை உணர்வீர்கள்.

சுமார் 7 அடி உயரமுள்ள கல்திருமேனியாக ஆதிமூலன், ஆதி கேசவன், நாரதஅய்யன், அனுப்பிரியன் என்று அனேக பெயர்களை உடைய எம்பெருமான் அனேக ஆபரணங்களைப் பூண்டு நிற்கின்றார். நீண்முடியும், சங்கமும், சக்கரமும், பொன்நாணுமாய் இந்தத் திரு மால் நிற்கும் அழகே ஓர் இலக்கிய சோலை எனலாம்.

பக்கத்தில் பரமனுக்கு ஏற்ற பிராட்டியாய், கல்விக்கிரகமாய் மரகதவல்லி, **பக்தர் மனப்பாங்கறிவாள்** என்னும் திருமகள் ஒப்பில்லா உயர் அழகாய் வீற்றிருக்கின்றாள்.

மறுபக்கம் பொன்மாலை சூடிகொடுத்தும் பாமாலை பாடிகொடுத்தும் அரங்கனோடு ஐக்யமாகிவிட்ட அன்னை. எதிரில் விரிநீள் சிறகும்,

விறன் மார்பும், ராஜபார்வையும், எவரும் வெல்லவல்லான் இல்லாத வீரமும் படைத்த கருடாழ்வார். எதிரில் இராமநாமமே பேச்சும் மூச்சும் என்ற வானரவீரன். ஐந்தடி உயர அழகியே மணியனாகச் சொல்லின் செல்வன்; அன்று சப்த தீர்த்தங்களுக்குக் கொடுத்த வாக்குப்படி இங்கே வசிப்பவன் கீர்த்தி மிகுந்த அனுமான்.

இவர்களுக்கிடையே கருட ஸ்தம்பம் என்ற தீபஸ்தம்பம் சிறந்த முறையில் விளங்குகிறது.

சரித்திரம் சொல்லும் கதைகள்

நதிகளின் வடிவான கிணறு காலப்போக்கில் சிறியதாகிப் படிகள் தகர்ந்துவிட்டன அதனைப் புதியதாக நிர்மாணித்து ஒரு மன்னன் ஆதிகேசவர் கோவிலையும் திருத்திக்கட்டினான்; ஆண்டவன் சார்பாய் கிணறு இருக்கவே அரசன் தன்சார்பாயும் ஓர் கிணறுவெட்டி அதனைச் சுற்றி உண்டான ஊருக்குப் பரமன் கேணி என பெயரிட்டான் என்று பெரியார்கள் கூறுகின்றனர். இம்மன்னன் பல்லவ திலகம் **பரமேஸ்வரவர்மனாக** இருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர் பல்லவர் சிற்பிக்கு சான்றாக விளங்கும் இப்பெருமான் வடிவம் 1800 ஆண்டுகளைக் கடந்தபின்னும் புதிய பொலிவுடன் விளங்குவது அரிய செய்தியாகும்.

ஜோதிட நோக்கில்

இது புதனுக்குரிய திருப்பதி இங்குப் புதன் தசையில் கஷ்டப்படுவோர் வழிபட்டால் நலம் கிடைக்கும் புதன்கிழமைகளில் விளக்கிட்டு வழிபடுவதனால் கல்வியில் உண்டாகும்; தடைநீங்கும்.

பக்தர்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்

பல்லவர் காலத்தில் மிகச்சிறந்த கடற்கரை பட்டினமாக விளங்கிய மாமல்லபுரத்தின் துணைப்பட்டினமாக விளங்கிய கூவத்தூர் இன்று சிற்றூராகக் காட்சி அளிக்கின்றது வெட்டவெளியாய்ப் போன இக்கேசவர் ஆலயத்தைக் கிராமமக்கள் ஒரு திருப்பணிக்குழு அமைத்துப் பல லட்ச ரூபாய் செலவில் திருப்பணிகளை மேற்கொண்டிருக்கின்றனர். மிகவும் விரிவான திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

அனுமன் சன்னதி பெருமாள் ஆண்டாள் தாயார் சன்னதிகளும் திருமதிலும் வேகமாகத் திருப்பணி நடைபெற்று வருகின்றது.

உற்சவ திருமேனிகளாகப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி ஆண்டாள் சுதர்சனர் அனுமார் ஆகியோர் உருவாகி வருகின்றனர். இத்திருப்பணிக்குப் பொன், வெள்ளி ஆகியவற்றை வாரி வழங்க வேண்டுகிறோம்.

மிகக் குறுகிய காலத்தில் மகா சம்புரோட்சணம் நடைபெற இருக்கும் திருப்பணிகளுக்குப் பக்தர்கள் தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். ஸ்ரீ ஆதிகேசவரும் பக்தர் மனப்பாங்கறிவாளும், உங்களையும்பார்ப்பார்கள்; செல்வமழை உங்கள் முற்றத்தில் பொழியும்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

**அன்பர்கள் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி :**

பொருளாளர்

**ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்
கோவில் திருப்பணிக் குழு**

கூவத்தூர்–603 305

மதுராந்தகம் வட்டம்

செங்கை மாவட்டம்

அச்சிட்டோர் :

செல்வா பிரஸ், சலவையாளர்புரம், அடையார், சென்னை–600 020

தாயார், பெருமாள். ஆண்டாள் சன்னதிகளில் நடைபெறும் திருப்பணிகள் (25-12-84)